# தங்கள் இரட்சிப்பை சந்தேகிக்கிறவர்களுக்கான நம்பிக்கை - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், இதுவரை கேட்கப்பட்ட மார்க்கம் சார்ந்த கேள்விகளை பார்க்க இருக்கிறோம்: உங்களுடைய நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயத்தோடு இருப்பது எப்படி?

**டாக்டர். எர்வின் லட்சர்:** நீங்கள் மரித்த அடுத்த விநாடியில் ஒருவேளை அழகான சூழலை, கிறிஸ்துவின் மகிமையை பரலோகத்தில் காண்பீர்கள். அல்லது நீங்கள் இன்று கற்பனை செய்து பார்க்க முடியத் பயங்கரமான சூழலை காண நேரிடும். அதை குறித்து யோசிப்பதை நிறுத்திவிட்டாலும், நமக்குள் எழும்பும் முக்கிய கேள்வி இதுதான், என்னுடைய நித்தியத்தை எங்கே செலவிடபோகிறேன்?

**அறிவிப்பாளர்:** இந்த கேள்விக்கு பதிலளிக்க இருப்பவர் ஜானுடைய இன்றைய விருந்தினர் டாக்டர் எர்வின் லட்சர், மூடி மெமோரியல் திருச்சபையின் தலைமை போதகர் சிகாகோ இல்லிநோசிஸ்.

இவர் மேலும் சில கேள்விகளுக்கும் பதில் அளித்திடுவார்:

ஆதியில் தேவனோடு உறவு வைத்து விசுவாசிகளாக இருந்த பின்னர் தங்கள் வாழ்வில் பின்வங்கியவர்களை குறித்து வேதம் என்ன போதிக்கிறது?

ஒரு கிருஸ்துவன் தன்னுடைய பாவங்களை அறிக்கையிடாமல் மரிக்கும் போது  தேவன் அவனுக்காக செய்த செயல்களை ரத்து செய்திடுமா?

நாம் இன்றைக்கு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் நாளைக்கும் என்றன்றைக்கும் இரட்சிக்கப்பட்டிருக்கும் நிச்சயம் நமக்கு இருக்கிறதா?

இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இது ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சி

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நீங்கள் மரிக்கும் போது உங்கள் நித்தியத்தை தேவனோடு செலவிடுவீர்கள் என்ற நிச்சயத்தோடு இருப்பது எப்படி என்பதை குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். இதைவிட முக்கியமான காரியம் ஏதாவது இருக்கிறதா? உங்களிடம் கேட்கிறேன், உங்களுக்கு தெரியுமா?

எர்வின், உங்க புத்தகத்தில், ஜனங்களிடம் காணப்படும் சில பிரச்சனைகளை பற்றி கூறியிருக்கிறீர்கள், அவர்களிடம் காணப்படும் சந்தேகங்கள், மேலும் இந்த சந்தேகங்களுக்கு பதிலை பெற எத்தனை கோடி வேண்டுமானாலும் கொடுத்திடுவார். அவர்கள் தேவனுக்குள்

நிச்சயமான இரட்ச்சிப்பை கொண்டிருக்க விரும்புகிறார்கள். ஓகே? இந்தமாதிரியான சில கவலைகளை விளக்கி சொல்லுவதோடு துவங்கிடலாம். நீங்க ரோமிற்கு சென்றால், செயின்ட். பீட்டர் ஆலயத்திற்கு சென்று மைகேல் ஏன்ஜெலோ வரைந்த இறுதி நியாயதீர்ப்பு என்ற ஓவியத்தை பாருங்கள். அவர் என்ன சொல்லுகிறார் என்பதை மக்கள் புரிந்துகொண்டால் - நீங்களே யோசிப்பீர்கள் அடுத்த வினாடி நான் மரித்தால் நியாயத்தீர்ப்பு அடைவீர்கள் என்பதை அறியும் போது உங்கள் முகம் எப்படி இருக்கும்? அவருடைய ஓவியத்தில் இறுதி நியாயத்தீர்ப்பில் நிர்ப்பவர்களின் முகபாவனையை அதில் சித்தரித்திருக்கிறார். பொதுவாக அதில், அவர்களிடம் உள்ள கவலைதான் தெரிகிறது. பயம் தெரிகிறது. தேவனை முகமுகமாய் காண்போம் என்றதும் பலருடைய சிந்தையில், பரிசுத்தமானவர், இவர்களை பற்றி அனைத்தையும் அறிந்தவர், என்ற பயம் ஏற்படுகிறது. அவர்களுக்குள் நிச்சயம் இல்லை, சபைக்கு பூகிரவர்கலானாலும் சரி, கிறிஸ்துவுக்குள் விசுவாசம் வைத்து வாழ்கிரவரானாலும் சரி.

சிலர், தவறான விசுவாசத்தை கொண்டுள்ளனர். சிலரிடம் மெய்யான விசுவாசம் இருக்கிறது. அதை நாம் சரிசெய்திட வேண்டும். ஆனால் ஆறுதலாக என்ன சொல்வீர்கள், மக்கள் இந்த விதமான விசுவாசத்தை கொண்டிருக்க முடியும் என்று தேவ வார்த்தையில் எந்த வாக்குத்தத்தத்தை எடுத்து சொல்வீர்கள். அது அவர்களுடைய திறமையை சார்ந்ததல்ல. இதை பார்க்கலாம்.

**லட்சர்:** வெல், ஜான், உண்மையில் எந்த ஒரு மனுஷனும் இயல்பாக கேட்கக்கூடிய முக்கியமான கேள்விதான் இது, தேவனோடுள்ள நமது உறவு, பரலோகம் நியாயத்தீர்ப்பு மற்றும் பல கேள்விகள் எழும்புகிறது. இந்த நிகழ்ச்சியில் நாம் தவறான விசுவாசம் மற்றும் சரியான விசுவாசத்தை வகையறுக்கப் போகிறோம், ஏனென்றால் நாம் இதை செய்யாமல், இந்த பகுதியை துவங்க முடியாது. வேத பாட வகுப்புகள் எடுக்கும் ஒரு பெண்ணைக் குறித்து ஒரு சம்பவத்தை சொல்லுகிறேன். அவளுக்குள் ஒரு மென்மையான விசுவாசம் இருந்தது. நான் அப்படி சொல்லக் காரணம் அவளுடைய கணவர் அதை விசுவாசித்தார். அவளை அறிந்தவர்கள் அதை விசுவாசித்தனர். ஆனால் அவளுக்குள் எப்போதும் சந்தேகம் கானப்பட்டுக்கொண்டிருந்ததது. ஒரு முறை ஒரு கேம்ப்ல், அவளுடைய கணவரும் அந்த பெண்ணும் நானும் பின்புறத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தோம். நான் அந்த நாத்தியை பார்த்துக்கொண்டிருக்கையில் எனக்கு ஒரு கதை நினைவிற்கு வந்தது. அது உண்மையா  பொய்யான்னு தெரியாது, ஆனா அந்த நேரத்தில் அபாரமா இருந்த்தது. உறைந்த நதியை ஒருவன் கடந்து போகிறான், ஆனால் அந்த பனிகட்டி மெல்லியதாக இருந்ததால் அவனுக்கு பயமாக இருந்த்தது. அவனுடைய இடையை அவன் சீராக வைத்திட முயன்று, அவன் அதின்மேல் கைகளால் கால்களால் தவழ்ந்து, அந்த நதியை கடந்திட முயன்றான். சரி, அப்போது அவன் தூரத்தில் தன்னை நோக்கி ஒரு குதிரை படை வந்துகொண்டிருப்பதை கவனித்தான்.

அப்போதுதான் அவன்  நினைத்தான், இந்த குதிரை கூட்டத்தை இந்த பனிக்கட்டி தாங்கக்கூடுமானால், நான் எதற்க்காக இப்படி தவழ்ந்து செல்லவேண்டும்? நான் ஏன் எழுந்து துள்ளி குதித்து ஓடக்கூடாது என்ற நினைத்தான். அந்தப்பெண் இதை சீக்கிரமாக புரிந்து கொண்டாள் ஏன்னென்றால் நான் அவளிடம் சொன்னேன், உண்மையான விசுவாசியாக உங்களுக்கு கீழ் இருக்கும் பனிக்கட்டி எப்படி தடியாக இருக்கிறதோ அதேபோல தான் எனக்குள்ளும் இருக்கிறது என்றேன். நாம் இருவரும் கிறிஸ்துவை சார்ந்துகொண்டிருக்கிறோம். அதற்க்கு அவள், நமக்குள் இருக்கும் ஒரே வித்தியாசம், நீங்க சந்தோஷமா இருக்கீங்க நா அப்படி இல்லை. அதுதான் உண்மை.

அதனால் ஜான் நாம் ஒரு காரியத்தை நன்கு ஆலோசிக்கும் படியாக இந்த காரியம் எடுத்துரைக்கிறது அதாவது,சரியான விதமான விசுவாசம் நமக்குள் இருந்தால், கிறிஸ்துவின் மீது, அதாவது கிறிஸ்துவின் மீது மட்டுமே விசுவாசமுள்ளவர்களாக இருப்பது நல்லது, அதையே அறிக்கையில்டும், திடமான நம்பிக்கை என்ற தவறான விசுவாசத்தோடு இருக்க கூடாது.

பாருங்கஇ ஏனென்றால் ஒருவேளை அந்த மனிதன் தன்னால் இந்த பனிக்கட்டி மீது ஓட முடியும் என்று நினைத்து ஓடியிருந்தால் அதனுடைய தடிமம் குறைவாக இருந்த்திருந்தால் அவன் மூழ்கியிருப்பான்.விசுவாசம் என்பது எத்தன மீது செளுத்தப்படுகிரதூ அதன் அடிப்படையில்தான் இருக்கிறதுஇ அதைதான் நாம் இப்போது

பேசிக்கொண்டிருக்கிறோம். ஒருவன் எப்படி இயேசுவின் மீது விசுவாசமுள்ளவனாக இருந்தால் திருப்த்தியடைய முடியும் என்று வேடம் கூறுகிறதுஇ அதாவது வேடம் சொல்கிறதுஇ விசுவாசத்தின் முழு நிச்சயம் என்கிறதுஇ இதுதான் நம்முடைய தலைப்பு என நினைக்கிறேன். வதாக வேதம் கூறுகிறது, அதாவது வேதம் சொல்கிறது, விசுவாசத்தின் முழு நிச்சயம் (எபி. 10:22) இதுதான் நம்முடைய தலைப்பென நினைக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆமாம் ஒருவேளை நீங்கள் ஜனங்களுடைய சிந்தனையை சீர்படுத்தி அவர்களுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தை அளிக்க விரும்பினால், அவர்களுக்கு சில வாக்குத்தத்தங்களை நினைவுபடுத்துவது அவசியமாகும். துரதிஷ்டவசமாக நம்முடைய பிரசன்கியாரான சில நண்பர்கள் இதை எடுத்ஹ்டுரப்பதில்லை. உண்மையில், இரட்சிப்பை குறித்து பேசும் பொது இவற்றை கருத்தில் கொள்வதில்லை.

உதாரணமாக, இதை நான் வெளிப்படையாக சொல்கிறேன். புத்தகத்தில் ஒரு பிரசன்கியாரின் வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்த பெண்ணை பற்றி எழுதியிருக்கிறீகள். இந்த பிரசங்கியார் சொல்கிறார், நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும், ஆனால் அவர் இதை எப்படி சொல்கிறார் என்றால், அதாவது அவர்களுடைய கிரியைகளில் கவனம் வைக்கவேண்டுமாம். அவர்களுடைய கிரியைகளினால் அது நிருபிக்கப்படாவிட்டால் அவர்கள் இரட்சிப்பின் பூரணத்தை

அடைவதில்லையாம். நான் நினைக்கிறேன், இது அழிவிற்கான அடையாளம் ஏனென்றால் நீங்க கேட்கனும் நான் ஏற்றுக்கொள்ளப்பட்டேன் என்ற நிச்சயத்தை பெற நான் எப்படிபட்ட கிரியைகளை எத்தனை முறை செய்ய வேண்டும்? இப்போது கிறிஸ்துவை மையப்படுத்துவதைவிட என்னுடைய கிரியைகளுக்கு முக்கியத்துவம் உண்டாகிறது. அந்த பெண்ணை பற்றியும் நீங்கள் சொன்னதையும் சொல்லுங்கள்.

**லட்சர்:** சரி, அந்த சூழ்நிலை இதுதான். நஅந் என்னுடைய சபை அலுவலகத்தில் இருந்தேன் அப்போது ஒரு போன் வந்தது. ஒரு மருத்துவமனையிலிருந்து ஒரு பெண் என்னை அழைத்திருந்தார்கள்.அவர்கள் என்னிடம், நாங்கள் ஒரு அறையில் கூடி காலைதோறும் ஒரு பிரசங்கியாருடைய செய்தியை கேட்டுவருகிறோம் என்றார்கள். அதோடு அவர்கள், நான் கிறிஸ்தவள் என்பதை அறிவேன் என்றார்கள். ஏனென்றால் இவர்களும் ஒரு விசுவாசியாக இருக்கிறார்கள். நாம் நம்முடைய மக்களுக்கு முன்பாக நிலைபடுத்த வேண்டும் ஜான், ஏனென்றால் இதுவரை மெய்யான விசுவாசம் பொய்யான விசுவாசத்தை குறித்து பேசவில்லை. இவர்களுக்குள் மெய்யான விசுவாசம் இருக்கிறது என்பதற்கான சகல ஆதாரங்களும் இருக்கிறது. ஆனால் அவர்கள், இந்த பிரசங்கியாருடைய வார்த்தைகளின் படி அப்படியில்லை என்கிறார்கள். ஏன் என்று கேட்டேன், அதற்க்கு அவர்கள், ஏன்னா உண்மையான கிருஸ்தவர்கள்

ஒருபோதும் பாவம் செய்வதில்லை என்கிறார். அப்படி செய்தால் அவர்கள் சிறிது காலத்தில் முற்றிலும் பின்மாற்றம் அடைந்துடுவார்கள் என்று சொல்கிறார் என்றார்கள். மேலும் அவர், ஓ என் தேவனை பலமுறை நான் வேதனைபடுத்தியிருக்கிறேன். நான் மகாபாவி தேவனை இழந்துவிட்டேன் என்றார்கள். மேலும் அவர்கள் சொன்னது, கிறிஸ்துவின் இரத்தம் போதுமென்று நான் நினைத்திருந்தேன் ஆனால் அவர் அது தவறு என்கிறார் என்றார்கள்.

நான் அவர்களிடம் சொன்னேன், கிறிஸ்துவின் இரத்தம் போதுமானது தான். இந்த நிகழ்ச்சியின் முடிவில், நாம் நிச்சயமாக எப்படி இயேசுவின் இரத்தம் போதுமானதாக இருக்கிறது விளக்கத்தை அழித்திடுவோம். நான் சொன்னேன், கிறிஸ்துவின் இரத்தம் போதுமானதாக இருக்கிறது.

அதற்க்கு அவர்கள், என்னுடைய இருதயத்தை பற்றி என்ன என்று கேட்டார்கள். அருமையான கேள்வி. இந்த அருமையான சகோதரி சொன்னது என்னவென்றால், இரும்பு நாரைக்கொண்டு என்னுடைய இருதயத்தை அரக்கி தேய்க்க முடியாது, என்ன செய்வதென்று கேட்டார்கள்.

அதற்க்கு நான் சொன்னேன், உங்களுடைய விசுவாசம் இயேசு கிறிஸ்துவின் மீதும் அவர் சிந்திய இரத்தத்தின் மீதும் இருந்தால் போதும் என்றேன்,

அவங்க கேட்டாங்க, உண்மையாகவா? அது போதுமா?

நான் சொன்னேன் ஆமா அதுவே போதும்.

நான் போனை வைத்ததும் அறைக்குள் சென்று மற்ற பெண்களிடமும் சொல்லிடுவேன். இயேசுவின் இரத்தம் மட்டுமே போதுமானது என்றிடுவேன். அதாவது ஜான், கிறிஸ்துவின் இரத்தமே போதுமானது என்று எல்லா வகையிலும் சொல்லிட வேண்டும். சரி, அது பல காரியங்களை முன்மொழிவதாக இருக்கிறது. கிறிஸ்துவின் இரத்தத்தின் மீதும் இயேசு சிலுவையில் செய்து முடித்த காரியத்தையும் நீங்கள் உண்மையாய் நம்புகிறீர்கள் என்பதை அது எடுத்துரைக்கிறது. அதுமட்டுமின்றி, நீங்கள் உண்மையான கிறிஸ்தவர் என்று சொல்லப்படும் வகையில் உங்கள் வாழ்வில் சில ஆதாரங்களும் இருக்கிறது, ஆனால் முதலில், நாம் சொல்ல வரும் காரியம் என்னவென்றால், இயேசு எனக்காக செய்த காரியமே போதுமானது என்பதை காணும்போது முழு நிச்சயமுடையவர்கலாக இருந்திடுவோம். எல்லாம் முடிந்தது. முழுமையாக செலுத்தப்பட்டது. நமக்குள் நாம் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** இப்ப எல்லாருடைய கவனத்தையும் பெருகிறீகள். அவர்களுடைய கருத்து, ஒகே, அப்படியென்றால் உண்மை என்ன என்பதை நான் அறிந்துகொள்ள வேண்டும், தவறான விசுவாசம் எப்படிபட்டது, உண்மையாவா விசுவாசம் எப்படிபட்டது. அதன் வித்தியாசத்தை பார்க்கலாம். ஒகே? அதை பற்றி பேசலாம். முதலாவதாக நமக்குள் உண்டாகும் தவறான நம்பிக்கையாக நான்

பார்க்கும் காரியம், அதாவது சிலருடைய கருத்து என்னவென்றால், “நான் கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்...” அதோடு மற்றொரு வாதையையும் இனத்திடுவார்கள். என்ன சொல்வங்கன்னா? அதுல என்ன தப்புன்னு கேட்பாங்க.

**லட்சர்:** வெல், அவர்களை பொறுத்தவரை விசுவாசம் என்பது ஒரு மியுச்சுவல் பன்ட் போன்றதாக இருக்கிறது. அதாவது, எல்லா முத்தைகளையும் ஒரே பையில் வைக்க விரும்ப மாட்டீர்கள். நான் இயேசுவையும் விசுவாசிக்கிறேன் இதையும் நம்புகிறேன்.” பல முறை இந்த சம்பவங்களை அனுபவித்திருக்கிறேன். ஒருவரிடம் நான் சொன்னேன், நீங்க இன்றைக்கு மரிக்கிரீர்கள் அப்பா தேவன் உங்களிடம் கேட்கிறார், எதற்காக உன்னை பரலோகத்திற்குள் சேர்க்க வேண்டும் என்கிறாய்? அப்பா என்ன சொல்வீர்கள்?

அதற்கு அவர், சரி நான் நல்லவன் என்பதால் என்றார். அவர் தொடர்ந்து சொல்லிக்கொண்டே போனார். அப்பா நான் சொன்னேன், தெரியுமா, அது தப்பு. அதற்க்கு பதில் இயேசு மக்களின் பாவத்திற்காக மரித்தார் என்பது தான் சரியானது என்றேன்.

ஓ சரிதா, நானும் அவரை விசுவாசிக்கிறேன், ஓ, ஆமா அதுவும் இதில் அடங்கும். இப்படிப்பட்டவர்களை பற்றி தைரியமா சொல்ல புடியும் அவர்கள் போகமாட்டார்கள். கிறிஸ்துவை எப்படியெல்லாம் நிந்திக்கிறார்கள் என பாருங்கள். அவர்கள் உண்மையாய் என்ன சொல்கிறார்கள் என்றால், இயேசுவே நீர் சிலுவையில் செய்த காரியம்

போதுமானதாக இல்லை, உம்முடைய சிறந்த செயலோடு நான் என்னுடைய கிரியைகளை சேர்த்துக்கொண்டால் மட்டுமே அது போதுமானதாகும் என்கிறார்கள். அப்போது அது நிறைவாகும். என்னுடைய பங்கை நான் செய்கிறேன் உம்முடையதை நீர் செய்திடும். ஒரு காரியம் புரிகிறது. உங்களுடைய பாகத்தில் என்ன சொல்லவருகிறீர்கள் என்ற நிச்சயம் உங்களுக்கு இல்லாததால். அவர்களுக்கு புரியவைப்பது கடினமாக இருக்கிறது. அதுதான் தவறான நம்பிக்கை. கிறிஸ்துவும் சடங்குகளும், கிறிஸ்துவும் பரிசுத்த கிரியைகளும், கிறிஸ்துவும் ஞானஸ்நானமும்.

**ஆன்கர்பெர்க்:** இங்க கொஞ்சம் நிறுத்தி சொல்வோம், என்ன வழக்கமான தர்கிப்போடு தொடர்புடையதாக இருப்பது போலா காணப்படுகிறது அதாவது இவர்கள் கருத்து, இதுதான் கிருபை என்கின்றனர், கிறிஸ்து வந்தார் கிரியைகளை நடப்பிக்கும்படி எனக்கு வல்லமை கொடுத்திருக்கிறார், அவருடைய கிரியைக்கு சிறப்பு சேர்க்கும்படி நானும் செயல்படுகிறேன் என்கின்றனர்.

**லட்சர்:** உன்மைதான, அதைதான் ஜெபிக்கும்படி ஆலயத்திற்குள் சென்றவனும் செய்கிறான். லூக்கா 18:11-12 வசனங்களை பாருங்கள். உமக்கு நன்றி தேவனே நான் மற்றவனை போல அல்ல, தேவனே நான் சிறப்பானவன், நற்கிரியைகளை செய்யும் படிக்கு நீர் எனக்கு கிருபையளிக்கிறீர்  இதுதான் உம்முடைய கிருபை என்கிறான். ஆனால் கிருபையை குறித்த அவனுடைய புரிந்த்துகொள்ளுதல் சரியானதல்ல.

அது அவனுக்கு நீதியாகவில்லை என்று இயேசு சொல்கிறார். மற்றவர்களுடைய இரட்சிப்பை நீங்கள் கைகளில் வாங்கிகொள்ளும்படி கிருபையானது மனிதர்களால் உண்டாக்கப்பட்ட சடங்கு அல்ல. கிருபையானது இருதயத்திற்குள்ளிருந்து வந்திடும். வசனத்தை பிரசன்கிப்பதால் உண்டாகும். தேவனுடைய பரிசுத்த ஆவியினால் உண்டாகும், அதை மக்களுக்கு முன்பாக நாம் வெளிபடுத்துகிறோம். ஏனென்றால் சடங்குகள் முஉளம் இரட்சிப்பு உண்டாகிறது என்று சொல்லுகிறவர்களிடம் பேசினால் அவர்களுக்குள் எந்த நிச்சயத்தையும் பார்க்க முடியாது.

**ஆன்கர்பெர்க்:** ரைட், தீத்து 3:5 சொல்கிறது, நாம் செய்த கிரியைகளின் நிமித்தன் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதளினாலே நம்மை இரட்சித்திருக்கிறார், உண்மையில் நம்முடைய செயல்கள் என்று எதுவும் கிடையாது.

**லட்சர்:** தவறான விசுவாசத்தின் இரண்டாவது ராகம் கிறிஸ்துவின் மீதுள்ள தவறான நம்பிக்கை.

ஓ நான் இயேசுவை நம்புகிறேன். ஆமாம்.

அவர் பாவிகளுக்காக மரித்தார் என்று நம்புகிறீர்களா?ஆமா அப்படியிருக்கலாம் என்று நம்புகிறேன். அதாவது சாதாரணமான ஒரு நம்பிக்கை. இது இரட்சிப்பிற்கான விசுவாசமல்ல என்பதற்கு காரணம்

என்னவென்றால், அதைதான் லூத்தர் சரியாக சொன்னார் நாம் பரலோகத்ஹ்டிற்கு செல்வதற்கு மும்பு நரகத்திற்கு செல்ல வேண்டும் என்றார். அதாவது நம்முடைய பாவத்தை குறித்த அறிவு நமக்கு இல்லாத வரை ஏன் இயேசு சிலுவையில் மரிக்க வேண்டியது அவசியமாக இருந்தது என்பதை நாம் அறிந்துகொள்ளதில்லை என்கிறார். கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கிறவர்கள் சாதாரணமாக இறக்க எந்தவித அவசியமும் இல்லை. அவன் தன்னுடைய நித்தியா முடிவிற்காக முழு ஆத்துமாவோடும் நம்புகிறார், பொதுவாக இயேசுவை நம்புகிறேன் என்கிறவர்கள், போலியான விசுவாசத்தை உடையவர்களாக இருக்கின்றனர்.

சரி இதோடு சேர்த்த மற்ற பல ஆயிரக்கணக்கான நம்பிக்கைகளும் இருக்கிறது. மற்ற மார்கங்களில் இருக்கிறவர்கள் அதாவது நவீன கால அமைப்பில் உள்ளாவர்களும் இருக்கிறார்கள் அதையெல்ல இப்போது பார்க்கமுடியாது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாக இருந்தும் தவறான நம்பிக்கையில் இருப்பவர்களை குறித்து பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** எஸ். இபோதும் ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம். திரும்பி வந்ததும் நாம் பேச இருப்பது என்னவென்றால் இரட்சிப்பிற்கேதுவான மெய்யான விசுவாசம் எப்படிபட்டது? உண்மையான விசுவாசத்திக்குரிய அடையாளம் என்ன? ஆல்ரைட்? இணைந்திருங்கள், மீண்டும் சிந்திப்போம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் அவருக நாம் டாக்டர் ஏற்வின்லட்சருடன் பெசிக்கொண்டிருக்கொறோம் மூடி மெமோரியல் சபையின் போதக சிக்காகோ. நாம் மரித்த பிறகு தேவனோடு நித்தியத்தி செலவிடுவோம் என்ற நிச்சயத்தை பெருவது எப்படி என்பதி பார்த்திக்கொண்டிருக்கிறோம். தவறான விசுவாசத்தை பார்த்தோம். இப்போதும் நாம் பேசவேண்டியது எது உண்மையான இரட்சிப்பிற்கு ஏதுவான விசுவாசம். நான்கு குணாதிசயத்தை பற்றி சொல்லுங்கள்.

**லட்சர்:** சரி, முதலாவதாக கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தப்படும் விசுவாசம், நான் நினைக்கிறேன் நூறு முறைகளுக்கு மேலாக யோவான் சுவிசேஷத்தில் இரட்சிப்பு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தோடு இணைந்துள்ளதை பார்க்கிறோம். என்னிடத்தில் வருகிறவன் ... நித்தியா ஜீவனை அடைவான். யோவான் 6:37- 40 அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய புத்திரராகும்படி அதிகாரம் கொடுத்திருக்கிறார். யோவான் 1:12. குமாரனை விசுவாசிக்கிறவன் நித்ஹ்டிய ஜீவனை அடைவான். யோவான் 3:36.கிறிஸ்துவை விசுவாசிப்பது அவசியம் என்பதை எடுத்துச் சொல்லும் வசனங்களை நிகழ்ச்சி முடியும் வரை சொல்லிகொண்டே போகலாம்.

இப்போதும், நாம் சொன்னது போல, கிறிஸ்துவும், மற்றதும் என்றால், நாம் பிரச்சனைக்குள் சிக்கிகொல்விம், நாம் கிருச்துவைவிட

வேறொன்றை சார்ந்த்திருப்பதாக ஆகிடும். உங்களுக்கு தெரியுமா. லூத்தர் சுவாரஸ்யமான ஒரு கேள்வியை கேட்டார்.அவர் கேட்டார், நம்முடைய கிரியைகள் தேவனுக்கு விளைஎரபெற்றது என்றும் அவை இயேசு கிறிஸ்து சிலுவையில் நம்முடைய சார்பில் செய்த காரியத்திற்கு அழகு சேர்க்கிறது என்றும் எதை வைத்து சொல்கிறீர்கள் இயேசு கிறிஸ்துவினுடைய அர்முதமான செயலோடு நம்முடைய கிரியையை இணக்க நினைப்பது பெருமையை எடுத்துரைக்கவில்லையா? எனவே, இரட்சிப்பு என்பது கர்த்தருடைய செயல்.

**ஆன்கர்பெர்க்:** அமாம். பாவத்தினுடைய விளைவு என்ன என்பதையும் கிறிஸ்து யார் பிதாவினுடைய காரியங்கள் என்ன என்பதயும் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்.

**லட்சர்:** அகஸ்டினை எனக்கு பிடிக்கும், அவர் சொல்கிறார், தேவனுடைய பரிசுத்தத்தை புரிந்துகொண்டவன் அவரைப் பிரியப்படுத்த விரும்பிடுவான். கவனிங்க, தேவனுடைய பரிசுத்தத்தை புரிந்துகொண்டால், நம்முடைய கிரியைகள் ஏன் இரட்சிப்பிற்கு போதுமானதல்ல என்பதை நாம் புரிந்துகொள்வோம். இரட்சிப்பு தேவனுடையதாக இருக்க வேண்டும். அதாவது, சார்லஸ் ஹேடன் ஸ்பர்ஜனுடைய வார்த்தைகள் எனாகு பிடுக்கும் அவர் லண்டனில் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பிரசன்கியாராக இருந்தவர், அதாவது இது ஒரு அருமையான விஷயம் தானே, ஜான், இப்படிப்பட்டவைகளை

ஏன் நீங்களும் நானும் யோசிப்பதில்லை? அவர், என்னுடைய விசுவாசம் கிறிஸ்துவில் மாத்திரமே இருக்கிறது என்கிற நிச்சயம் எனக்கு இருந்தால் நான் சனல்நூலின் நுனியை பிடித்துக்கொண்டு எந்த பயமுமின்றி நரகத்தின் அக்கினி ஜெவாலையின் மேல் பறந்திடுவேன் என்றார். என்னவொரு அருமையான வார்த்தை.

**ஆன்கர்பெர்க்:** அருமையான காரியம்.

**லட்சர்:** இப்படிதான் நமக்குள்ளாக ஒரு உறுதி தோன்றுகிறது. இயேசு கிறிஸ்து ஒருவர் மீது மட்டுமே இருக்கும் விசுவாசம்.

**ஆன்கர்பெர்க்:** கிரியைகள் கிடையாது. ஞானஸ்நானம் கிடையாது, சடங்காச்சாரங்கள் கிடையாது, மற்ற எதையும் இதற்கு ஈடாக்க முடியாது. அவரே போதுமான இரட்சகராவார். மற்றவைகளை அவர் அகற்றிடுவார்.

**லட்சர்:** ஓ, அவர்தான? அவர் அருமையானவர் அவர் ஒருவர் மட்டுமே உதவ முடியும். அதை பற்றி சொல்ல இன்னொரு நிகழ்ச்சியையும் நடத்தலாம்...

**ஆன்கர்பெர்க்:** ஆமா. இப்ப இரண்டாவதை பார்க்கலாம்.

**லட்சர்:** இரண்டாவதாக, பரிசுத்த ஆவியினால் உருதிசெயயப்படுதல். ரோமர் எட்டிலிருந்து இதை சொல்கிறேன் மற்ற இடங்களிலும் இது சொல்லப்பட்டிருக்கிறது. "ஆவியானவர் தாமே நாம் தேவனுடைய

பிள்ளைகள் என்று நம்முடைய ஆவியோடே சாட்சியளிக்கிறார். (ரோமர் 8:16) தனிப்பட்ட சாட்சியை நான் பகிர்ந்திட விரும்புகிறேன். ஒகே, எனக்கு பதினாலு வயது. ஒரு உறுதியான பிடிமானம் உண்டாகும்படி நான் போராடிக்கொண்டிருந்தேன். விசுவாசத்தினால் ஜெபித்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன், அவர் எனக்காக மரித்தார் என்பதை நான் ஏற்றுக்கொண்டேன். உங்களுக்கு தெரியுமா, ஜான், அடுத்து நான் ஒரு குழந்தையை போல யோசித்தேன், இப்ப எனாக்கு வயசு பதினாலு, தேவனுடைய பிரசன்னத்தை அளவில்லாமல் உணர்ந்த்துகொண்டிருந்த்தேன், அப்போது நான் நினைத்தேன், அதாவது, ஒரு கதவை திறக்காமல் அப்படியே என்னால் நுழைந்திட முடியும். முயற்சி செய்யலா இன்றைக்கும் செய்யமாட்டேன். ஆனால் தேவனுடைய பிரசன்னத்தின் உணர்வு எனாக்குள் இருந்தது. அதாவது கிறிஸ்துவுக்குள் வழிநதத்தும் போது - ஒரு மனிதன் மரித்துக்கொண்டிருந்தான், ஒரு அற்புதமான சம்பவம். என்னுடைய புத்தககத்தில் இத சேர்க்கவில்லை புத்தகத்தை எழுதிய பிறகு நடந்த சம்பவம் இது. ஒருவர் புட்ட்ருநோயால் மரித்துக்கொண்டிருந்தார் அவரை சந்தித்தேன். ஒருசில வாரங்கள் மட்டுமே இருப்பார் என்று சொள்ளப்பட்டிருன்தவர். நான் அவரிடம், சொன்னேன், நீங்க இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும், அவர் பல முறை பல செய்திகளை கேட்டிருந்த போதிலும், அவர் என்ன சொன்னார் தெரியுமா? எனக்கு தெரியும் ஆனா எப்படின்னு தெரியல என்றார். நம்ப முடிகிறதா?

**ஆன்கர்பெர்க்:** வாவ்.

**லட்சர்:** எனவே அவரை கிறிஸ்துவுக்குள் நடத்தினேன், கிறிஸ்து மாத்திரம், கிறிஸ்துவுக்கு நேராக அவருடைய சிந்தையை திருப்பிடவும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் அவருக்காக ஜெபித்தேன். விசுவாசத்தின் நிச்சயம் அவருக்கு ஏற்படும்படியாகவும் ஜெபித்தேன். அவருடைய வாழ்வின் இருதிநேரங்களில் அவரை பார்க்க வந்த உறவினர்களிடம் அவர் என்ன எதிர்பார்த்தார் என்று தெரியுமா? வேதத்தை எனாக்காக வாசியுங்கள். வேதத்தை வாசியுங்கள் என்றார். எதற்காக? அதற்க்கு முன்பு அவருக்கு வேதத்தில் நாட்டம் ஏற்படவில்லை.

நம்முடைய விசுவாசம் உறுதி செய்யப்படும் இரண்டாவது விதம், என்னவென்றால், பரிசுத்த ஆவியானவருசைய செயல்பாடு. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பது நமக்கு தெரியும். நாம் புதிய சுபாவத்தை பெறுகிறோம், மருபிரப்படைகிறோம், என்பதை பற்றி நாம் பேசியிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** நாம் நினைக்கிறேன், எர்வின், வசனங்களின் மூலமாக கூட பரிசுத்த ஆவியானவரின் உறுதி நமக்கு உண்டாகிறது.

அது எப்படியிருக்குமென்றால் இயேசு என்னுடைய நாற்காலிக்கு இப்படு உட்கார்ந்து என்னிடம், கவனி, நான் உன்னை இரட்சித்திருக்கிறேன் என்ற நிச்சயம் வேண்டுமா? என்று சொல்லி,

என்னில் விசுவாசமா இரு. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடு என்பது போலிருக்கிறது. நான் என்னுடைய கையெழுத்தை போடா அவரும் அதற்க்கு கீழ் அவருடைய கையெழுத்தை போட்டு அதை அனுப்பியவாறு சொல்கிறார், இதோ இருக்கிறது, அதுதான் நம்மிடம் இருக்கும் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது.

**லட்சர்:** தட்ஸ் ரைட்.

**ஆன்கர்பெர்க்:** தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தேவனுடைய வக்குத்தத்தங்கலாகவே இருக்கிறது. அவை உங்கள் மேல் உதிக்கும் போது தேவன் சட்டரீதியாக எந்த ஓட்டையையும் ஏற்படுத்துகிறது கிடையாது. இதை விட்டு வெளிஎரட்ட்ற அவர் முயற்ச்சிப்பதில்லை. அவர் உங்களுக்கு நிச்சயத்தை ஏற்படுத்த விரும்புகிறார் அவருடைய வார்த்தையை விசுவாசித்தால், இரட்சித்திருப்பதை நம்பினால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிற ஒரே ஒரு காரியம் இதுவாக தான் இருக்கும். ஹேய் உன்னுடைய உணர்ச்சியின் படியல்ல என்பார் - அதைப்பற்றி நாம் பார்க்கவேண்டும். அதை நாம் அடுத்ததை நிகழ்ச்சியில் அதிகமாக பார்த்திடுவோம். உண்மை, விசுவாசம் மற்றும் உணர்வு போன்றவை - அது தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் பரிசுத்த ஆவியானவரும் அதை உருதிபடுத்துகிரவராக இருக்கிறார்.

**லட்சர்:** ஜான், நான் இன்னும் சில காரியங்களை சொல்லட்டுமா? இதை பார்த்துக்கொண்டிருப்பவர்களில் நாத்திகர் யாராவது இருந்திடலாம், அவர்கள் ஒருவேளை, ஆமா, இது தேவனுடைய வார்த்தை என்று நாம் நம்பவில்லை என்றிடலாம், நான் இயேசுவை விசுவாசிப்பதில்லை, அவர்களுக்கான 21 நாள் பயிற்ச்சியை சொல்ல விரும்புகிறேன். இது வாழ்வை மருரூபடுத்திடும். 21 நாள் பயிற்சி என்னவென்றால் புதிய ஏற்பாட்டின் யோவான் சிவிசெஷத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அதில் 21 அதிகாரங்கள் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒரு அதிகாரத்தை வாசித்து அவர்கள் சொல்ல வேண்டும். தேவனே, நீர் இருக்கிறீர் என்பதை  நான் நம்பவில்லை ஆனால் இது உண்மையாக இருந்தால் என்னக்கு வெளிபடுத்தும். இப்படி செய்து பல நாத்திகர்கள் மனமாற்றமடைந்திருக்கிரார்கள் என்று தெரியுமா ஏனென்றால் இது தேவனுடைய வாக்குத்த்தத்தம், தேவனுடைய வார்த்தை, தேவனுடைய ஆவியானவர் இதில் இணைந்து கிரியை செய்கிறபடியால் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவர்கள் சொல்வார்கள், யார் இந்த இயேசு? அவர் தன்னை குறித்து சொல்லியபடியே இருக்கிறார் என்பார்கள். அப்படிதான் அவர்களுடைய இருதயங்களில் விசுவாசம் பிறக்கிறது. விசுவாசம் கேள்வியினாலே வரும். ரோமர் 10:17.

ஒகே, கிறிஸ்துவுக்கு நேராக நம்முடைய விசுவாசம் திருப்பப்படுகிறது. பரிடுத்த ஆவியினால் உறுதிபடுத்தப்படுகிறது. வாக்குத்தத்தங்கள்

மேலும் விசுவாசம் கிரியைகளினால் வெளிபடுகிறது. வேதம் கூறுகிறது, நாம் நற்கிரியைகளை நடப்பிக்கும்படி இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் - உண்மையில் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர் 2:10)

**ஆன்கர்பெர்க்:** நற்கிரியை மூலமாக அல்ல.

**லட்சர்:** அது சரிதான், ஆனா இதை கவனிங்க, ஒரு மனிதன் மாற்றமடைந்தவுடனே, நிச்சயமாக வித்தியாசமான வாழ்க்கையை கொண்டிருப்பான். ஏனென்றால் வித்தியாசமான விருப்பங்கள் அவனுக்குள் உண்டாகும், ஆனால் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால் இந்த நற்கிரியைகள் நமக்கு உறுதியை நிச்சயத்தை அளிப்பதில்லை. ஏனென்றால் உங்களுக்கும் அணைக்கும் தெரியும்,நாம் இரட்சிக்கப்பட்ட பிறகும் பாவத்தோடு போராடிக்கொண்டிருக்கிறோம், நமக்கு சரி என்று தோன்றும் பல காரியங்களுக்கு நாம் கீழ்படிந்து நடக்க போராடுகிறோம், அதனால் அதன் அடிப்படையில் நம்முடைய உறுதிநிலை இருப்பதாக சொல்லிடமுடியாது. ஆனால் ஒரு நிச்சயம் உண்டாகிறது, அதாவது ஒருவர் என்னிடம் கேட்கலாம், நான் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். ஆனால் தேவனுக்கான அன்பு எனக்குள் இல்லை. தேவனை செவிக்கும்படியான விருப்பம் இல்லை. அவருடைய இருதயம் எனக்கு தெரியாது. தேவன் நியாயாதிபதி, அவர்

கிறிஸ்துவிடம் வரவேண்டுமா இல்லையா என்ற கேள்விக்கு நான் பதில் சொல்லவேண்டும்.

இன்னொரு விஷயம், வளர்ந்துகொண்டிருக்கும் விசுவாச நிலை. அதாவது நான் கல்லூரியில் இருந்த பொது வலிமையாக இருந்ததை விட தேவனுக்குள் கிறிஸ்துவுக்குள் வேடத்தில் எனக்கு இருக்கும் விசுவாசம் அதிகமாக இருக்கிறது. கடந்த ஆண்டைவிட இப்போது அதிக வலிமையாக இருக்கிறதென நம்புகிறேன். எனவே வளர்ச்சி பாதையில் வேதம் சொல்கிற நிலையை நாம் அடைந்திடுவோம்.விசுவாசத்ஹ்டின் பூரண நிச்சயத்தை அடைந்திடுவோம். எபி. 10:22. மேலும் சில புதிய கிறிஸ்தவர்களை தேவன் ஆசீர்வதித்திடுவார். அவர்கள் தங்கள் நம்பிக்கையோடும் சந்தேகங்கலோடும், போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து வேடத்தை வாசித்ஹ்டு தேவனோடு நடந்தால், பல சமயங்களில் அந்த சந்தேகங்கள் மறந்துவிடுவதொடு தேவனுடைய வாக்குத்தத்தத்தில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கை வளர்ந்திடும்.

**ஆன்கர்பெர்க்:** இரத்தத்தை குறித்து அருமையான உதாரணத்தை வைத்திருக்கிறீர்கள். அந்த காரியத்தை இந்த நிகழ்ச்சியில் சொல்ல வேண்டும்.

**லட்சர்:** நிச்சயமாக ஏன் என்று சொல்கிறேன், ஏனென்றால் இந்த நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருப்பவர்களில், சிலருக்குதாங்கள் மகாபாவி என்பது தெரிந்திருக்கும். மகாபாவிகளை எனக்கு பிடிக்கும்.

எந்தவித பாவத்தையும் செய்யவில்லை என்று சொல்லிக்கொள்கிறவர்களை கண்டு அழுத்துவிட்டேன். உண்மையில், நாம் எல்லாருமே பாவிகள் தான்.

பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேலர்களுக்கு சொன்னது ஞாபகமிருக்கட்டும். அவர் அங்கு, நான் எகிப்து தேசத்தை கடந்து வருவேன் என்கிறார், மேலும் அவர், நீங்கள் ஆட்டுகுட்டியை அடித்து, அதின் ரத்தத்தை வாசல் நிலைகாளில் பூசுங்கள், நாம் இரத்தத்தை பார்க்கும்போது கடந்துபோவேன். சங்காரத்தூதன் உங்களை தொடுவதில்லை. எகிப்தியரில் யாருடைய வீட்டில் இரத்தம் பூசப்படவில்லையோ அவர்கள் சாவார்கள் என்றார். யாத். 12. சரி,

ஒரு குடுபத்தினருடைய வாசலில் இரத்தம் பூசப்பட்டிருப்பதை கற்பனை செய்திடுங்கள். சரியா? அப்பா சொல்கிறார், இரத்தத்தை நிலைகாளில் பூசிடலாம், உங்களுக்கு தெரியுமா அவர்கள் அன்றிரவு நன்றாக தூங்கினார்கள என்பது பிரச்சனையல்ல. அவர்கள் நடுக்கத்தோடு இருந்ததிருக்கலாம். மூத்த மகன் சொல்லியிருப்பான், “சரி இந்த இரத்தம் என்னதான் செய்திடும்? சங்காரத்தூதன் நேரடியாக நம்மை தாக்கினால் என்னவாகும்? ஒன்றும் பிரச்சனையில்லை, நிலைகாளில் இரத்தம் இருக்கிறது. தேவன் கூறுகிறார், நான் இரத்தத்தை பார்க்கும்போது உங்களை கடந்துபோவேன்.” (யாத்.12:13)

இந்த நிகழ்ச்சியை துவங்கும்போது என்னிடம் கேள்வி கேட்ட ஒரு பெண்ணை குறித்து சொன்னேன், கிறிஸ்துவின் இரத்தம்

போதுமானதா? அதற்கான பதில், ஆம், போதுமானதே. கிறிஸ்துவின் மீது உங்களுக்குள்ள விசுவாசம், நாம் பார்த்த மற்ற விதங்களில் உறுதியாகிறது. ஆனால் எல்லாவட்டிர்க்கும் இறுதியில், இதை நான் மறுபடியும் சொல்லும்படியாக விரும்புகிறேன். இயேசு சிலுவையில் மரித்தபோது எல்லாம் பூரணமடைந்தது என்பதை நீங்கள் விசுவாசித்தால் சிந்தப்பட அவருடைய இரத்தமே போதுமானது, அவர் செய்தவற்றில் உங்கள் நம்பிக்கையை பத்தித்திட்டால், இரட்சிக்கப்படுவீர்கள். இதில் மேன்மை பாராட்ட உங்களுக்கு இடமில்லை என்பதை புரிந்துகொள்ளும் பொது நிச்சயம் உண்டாகிறது, உங்களுடைய பங்கு எதுவும் இல்லை அவர்தான் அனைத்தையும் செய்து முடித்தார். உங்களுடைய தேவையை தவிர உங்களிடத்தில் ஒன்றுமில்லை அவருடைய இலவச இவை பெற்றுக்கொள்ளுங்கள், இதுதான் சுவிசேஷம்.

**ஆன்கர்பெர்க்:** எர்வின் இதை கேட்டுக்கொண்டிருப்பவர்களில் அநேகர் தங்கள் இருதயத்தை தேவனுக்கு திறந்துகொடுக்க விரும்புவார்கள் என நம்புகிறேன். தேவன் அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிறார், அவர்களோடு பேசுகிறார் அவர்களிடைய நம்பிக்கையை இயேசுவின் மீது வைக்க விரும்புகிறார்கள். அவர்களை நீங்கள் ஜெபத்திலே நடத்திடுவீர்களா?

**லட்சர்:** அதையே விரும்புகிறேன் ஜான், இதுதான் அவசியமான ஒன்று.

**ஆன்கர்பெர்க்:** இதைதான் வேண்டுகிறோம்.

**லட்சர்:** பிதாவே, இயேசுவிற்காக உமக்கு இன்றைக்கு நன்றி செலுத்துகிறோம்.எங்களுடைய பிரயாணத்தின் துவக்கமாக அவர் இருப்பதற்காக நன்றி. அவரே பிரயாணத்தின் முடிவாகவும் இருக்கிறார். சிலுவைக்காக நன்றி, சிந்தப்பட்ட இரத்தத்திற்காக நன்றி, இன்றைக்கு கேட்டுக்கொண்டிருப்பவர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைக்கும்படி நீர் அவர்களுக்கு உதவிடும் படியாக ஜெபிக்கிறோம். இந்த ஜெபத்தை ஏறெடுக்க அவர்களுக்கு கிருபை அளித்திடும். "தேவனே நான் பாவி என்பதை அறிவேன். பாவிகளை இரட்சிக்கும்படியாக நீர் இயேசுவை அனுப்பியதற்காக நன்றி. இந்த நிமிடத்தில் அவரை என்னுடையவராக ஏற்றுக்கொள்கிறேன். உண்மையாய் சொல்கிறேன், அவருடைய இரத்தம் என்னுடைய கேடகம் அவரை நான் ஏற்றுக்கொள்கிறேன். அநேகருடைய வாழ்வில் இதை சாத்தியமாக்கும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

**ஆன்கர்பெர்க்:** ஆமென். அருமையாய் இருந்தது. அடுத்த வாரம் இன்னுமொரு அடியை எடுத்து வைத்திடுவோம். அந்த நிகழ்ச்சியை நாம் சந்தேகிகிகிரவர்களுக்கு மட்டும் என்று சொல்லுகிறோம். ஏனென்றால் எர்வின் சொன்ன எல்லாவற்றையும் கடந்து, இன்னும் சிலருக்கு தங்களுடைய இரட்சிப்பை ஏற்ப்பதில் போராட்டம் இருக்கிறது. அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அடுத்த வாரம் பார்க்கலாம்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.